வ.து.ந.க.எண்.ஆர்2/2267/2022

பெருநகர சென்னை மாநகராட்சி
வருவாய் துறை,
நாள். 14.01.2026.

**சுற்றறிக்கை**

பொருள்: ஏரியா சபா - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை – தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் மற்றும் விதியின்படி, ஆண்டுக்கு நான்கு கூட்டங்கள் நடத்திட ஆணையிடப்பட்டது – **25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தினத்தன்று** ஏரியா சபா நடத்திட கேட்டுக் கொள்வது – சம்மந்தமாக.

பார்வை அரசாணை (நிலை) எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.22,05,2023.

********

அரசாணை எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.22.05.2023 ன்படி ஒவ்வொரு ஆண்டும் பின்வரும் தினங்களில் நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் பிரிவு-எண்49-F முதல் 49-H வரை மற்றும் விதி எண்.180ன்படி, ஏரியா சபா கூட்டங்கள் நடத்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காலம் | நாள் | முக்கியத்துவம் |
|---|---|---|---|
| 1. | ஜனவரி முதல் மார்ச் வரை | 25 ஜனவரி | தேசிய வாக்காளர் தினம் |
| 2. | ஏப்ரல் முதல் ஜுன் வரை | 14 ஏப்ரல் | டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினம் |
| 3. | ஜுலை முதல் செப்டம்பர் வரை | 15 செப்டம்பர் | பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் |
| 4. | அக்டோபர் முதல் டிசம்பர் வரை | 10 டிசம்பர் | மனித உரிமைகள் தினம் |

மேலும், இவ்வினம் தொடர்பாக, அரசுக் கடிதம் எண்.9016/தேர்தல்/2023-24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 19.01.2023 நாளிட்ட கடிதத்தில், ஏரியா சபா கூட்டங்களை, ஒரே நாளில் நடத்துவதால், ஏற்படும் சிரமத்தை தவிர்த்திடவும் மற்றும் அந்தந்த வார்டுகளில் உள்ள தேவைகளை விரிவாக ஆலோசனை நடத்திடும் பொருட்டு, ஒரு ஆண்டில் நடத்தப்படும் நான்கு கூட்டங்கள் நடத்திடவும், அதனை தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட

வேண்டிய நாளிலிருந்து 15 நாள்களுக்குள் அனைத்து சபாக்களுக்கும் கூட்டங்கள் நடத்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, 25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தினத்தன்று ஏரியா சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

எனவே, மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர்களின் பங்களிப்புடன் மாமன்ற உறுப்பினர்களின் தலைமையில் வருகின்ற **25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தினத்தன்று**, ஏரியா சபா கூட்டத்தினை ஆரம்பித்து அடுத்து வரும் 15 நாட்களுக்குள் அனைத்து கூட்டங்களையும் நடத்திட மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள மண்டல அலுவலர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு வார்டிலும் ஏரியா சபா கூட்டங்கள் நடைபெற்ற விவரத்தை இவ்வலுவலகத்தின் தகவலுக்காக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்/-M.பிரதிவிராஜ், இ.ஆ.ப.,
துணை ஆணையர் (வ.ம.நி.)